கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்ட மாணி சிறப்புப் பட்டம்

முதலாம் ஆரையாண்டுப் பரீட்சை, வருடம் III – 2025

**Law 31302 - மனித உரிமைகள் சட்டம்**

(கால அளவு: 2 ¼ மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

எவையேனும் **இரண்டு (02)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் வரலாற்று பரிணாமம் பெரும்பாலும் மேற்கத்திய மையப்படுத்தப்பட்ட அடித்தளங்களில் வேரூன்றியதாகக் கருதப்படுகின்றமையானது, உலகளாவிய பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்காமை காரணமாக விமர்சனங்களுக்கு இது வழிவகுக்கிறது. இதற்கு நேர்மாறாக, மனித உரிமைகள் பற்றிய சமகால சொல்லாடல் உலகளாவிய தெற்கின் கண்ணோட்டங்களிலிருந்து பெருகிய முறையில் ஈர்க்கப்பட்டுள்ளது.

   சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி இந்த வாதத்தைப் பற்றி ஆராய்க. வாதத்தின் ஒவ்வொரு பக்கத்திற்கும் குறைந்தது இரண்டு எடுத்துக்காட்டுக்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (30 புள்ளிகள்)

2. மனித உரிமைகள் உலகளாவிய தன்மைக்கும் கலாசார சார்பியல்வாதத்திற்கும் இடையிலான விவாதம், உலகளாவிய தெற்கு மற்றும் உலகளாவிய வடக்கு என்பவற்றிற்கிடையேயான பதட்டங்களினால் தொடர்ந்தும் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. பாரம்பரியத்தின் பெயரினால், குறிப்பாக பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களைக் காட்டும் நடைமுறைகளை நியாயப்படுத்தவும் பாதுகாக்கவும் கலாசார சார்பியல்வாதம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது என்று உலகளாவிய வடக்கைச் சேர்ந்த அறிஞர்கள் கருதுகின்றனர்.

   மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான பொருத்தனை ஏற்பாடுகள் மற்றும் குறைந்தபட்சம் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவ ஆய்வுகள் என்பவற்றினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (30 புள்ளிகள்)

3. (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டிற்கும் விடைதருக.

(அ) 2006ஆம் ஆண்டில் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது பதிலீடு செய்தது. உலகளவில் மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்ட புதுமையான வழிமுறைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது அறிமுகப்படுத்தியது. உமக்கு விருப்பமான புதுமையான பட்டய அடிப்படையிலான மனித உரிமைகள் வழிமுறைகளிலொன்றைத் தேர்ந்தெடுத்து, அது சர்வதேச மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் எந்த அளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை மதிப்பீடு செய்க. தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறையுடன் தொடர்புபட்டதான முக்கிய அம்சங்கள் மற்றும் அதன் பங்களிப்பை நிரூபிக்க குறைந்தபட்சம் இரண்டு பொருத்தமான எடுத்துக்காட்டுகளி ^ஐ உமது விடையானது^ உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பொருத்தமான சர்வதேச ஆவணங்களுடன் தொடர்புபடுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

(ஆ) சிலோனிக்கா கூட்டாட்சி குடியரசானது ஐக்கிய அமைதி தாபனத்தின் அங்கத்தவராக உள்ளது. சிலோனிக்காவிலுள்ள பல்கலைக்கழக மாணவியான தினா என்பவள் மாணவர்கள் தலைமையிலான நிகழ்நிலை இதழில் சமூகத்தின் சமகால பிரச்சினைகள் குறித்து சிறப்புக் கட்டுரையினை எழுதுகின்றாள். சிலோனிக்கா அரசாங்கம் சமீபத்தில் அதன் 2025-2035 தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை செயல்படுத்தும் நடைமுறையினைத் தொடங்கியதுடன், இது பரந்த சமூகத்தால் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிகழ்ச்சி நிரல் நிலையாதார அபிவிருத்தி இலக்குகளை புறக்கணிப்பதாகவும் சிலோனிக்கா மக்களின் அபிவிருத்திக்கான உரிமையின் முக்கிய ஆக்கக்கூறுகளைப் பின்பற்றுவதற்குத் தவறிவிட்டது என்பதாக பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். தனது குடிமக்களின் மேம்பாட்டிற்காக அதன் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவதில் சிலோனிக்காவின் பொறுப்பைப் பற்றி விவாதிக்கும் தனது கட்டுரையை தினா எழுத விரும்புகின்றாள். இந்தக் கட்டுரையில் மனித உரிமைகள் முன்னோக்கைச் சேர்ப்பதற்கு, இணை ஆசிரியராக உமது பங்களிப்பை அவள் கோருகின்றாள். இக்கட்டுரையில் உள்ளடக்குவதற்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அபிவிருத்திக்கான உரிமையின் சட்டப் பகுப்பாய்வைத் தயாரிக்கவும். அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான பொருத்தமான சர்வதேச ஆவணங்கள், ஏற்பாடுகள் மற்றும் முக்கிய ஆக்கக்கூறுகள் என்பவற்றை உமது வரைவு உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

4. சூரிலாந்து என்ற நாட்டிலுள்ள சர்வதேச அளவில் நிதியளிக்கப்பட்ட குடியியல் அமைப்பான "வாய்ஸ் போர் ஜஸ்டிஸ்" (VFJ) என்பதன் நிர்வாக உறுப்பினரான சுகாரி என்பவர் சமீபத்தில் நீதிக்கான அணுகுதல் செயல்திட்டத்தில் ஈடுபட்டார். இந்த செயல்திட்டத்தின் கீழ், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதிக்கான அணுகலை ஊக்குவிக்கும் முயற்சியை சுகாரி ஒரு பொது பிரச்சாரத்தின் மூலம் மேற்கொண்டார். பிரச்சாரத்தின் போது வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்கள் உண்மையைத் தேடுதல் மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்திருந்தாலும், VFJ அதன் பரந்த நிகழ்ச்சி நிரலைப் பொதுமக்களுக்கு வெளியிட விரும்பவில்லை. மேலும், சூரிலாந்தின் தெற்குப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவை இந்த முயற்சியை வழிநடத்த வேண்டுமென்றே தேர்ந்தெடுத்தது. பிரச்சாரம் பிரபலமடைந்ததால், அது தேசிய நீதிக்கான அணுகல் கொள்கையுடன் முரணாக இருப்பதாகக் கருதப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, சூரிலாந்தின் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவானது, சுகாரி மற்றும் அவரது குழுவை நுணுக்கமாகக் கண்காணிக்கத் தொடங்கியது. மேலும், VFJ இற்கு எதிரான கிண்டலான, அச்சுறுத்தும் மற்றும் விமர்சன அறிக்கைகளை அரசாங்க பிரதிநிதிகள் வெளியிட்டனர். பின்னர், அந்த அமைப்பு அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொது பிரச்சாரங்களை நடத்தியது. ஆனால், அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிக்கான அணுகல் குறித்த அரச கொள்கைகளைத் தடுத்ததாகவும், பொது ஒழுங்கை அச்சுறுத்தியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டனர். குடியியல் சமூக அமைப்புக்கள் தேசிய பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் தெரிவிக்கின்றது. மேலும், VFJ வெளிநாட்டு செயற்பாட்டாளர்களால் செல்வாக்கு செலுத்தப்படுவதாகக் குற்றஞ்சாட்டியது.

மனித உரிமைகள் வழக்கறிஞர் ஒருவரென உம்மைக் கருதிக்கொள்க. மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் குடியியல் சமூகத்தின் பங்கைப் பற்றி ஆராய்க. மேலும், இந்த சூழ்நிலையில் VFJ தனது உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதனைப் பகுப்பாய்வு செய்க. சூரிலாந்துவினது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயமானது இலங்கையினதைப் போன்றது என்று வைத்துக்கொள்க. சர்வதேச வழக்காறுகள், பிரகடனங்கள், உள்நாட்டுச் சட்ட விதிகள் மற்றும் தொடர்புடைய வழக்கு ஆய்வுகள் என்பவற்றின் பின்னணியில் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(30 புள்ளிகள்)

**********************